**கவனிக்க.-** *2008.06.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1554 - 2008 ජූනි 13 වැනි සිකුරාදා - 2008.06.13

*1554 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 588 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 589 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்**. வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, யூன் 20 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூன் 06 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## கலாசாரமும் தேசிய மரபுரிமையும் பற்றிய அமைச்சு

## தொல்லியல் திணைக்களம்

### தொல்லியல் ஆராய்ச்சி உதவியாளர் பதவி

தொல்லியல் திணைக்களத்தின் தொல்லியல் ஆராய்ச்சி உதவி யாளர் பதவிக்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வி தகைமைகள்.**- (1) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றில் தொல்லியல் அல்லது சரித்திரம் பற்றிய சிறப்புப்பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(2) தொல்லியல் பாடத்தினைக் கொண்ட பொதுப் பட்டம் பெற்றிருத்தல் ;

அல்லது

(3) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றிருத்தல்

**2. ஏனைய தகைமைகள்.**- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொல்லியல் சம்பந்தப்பட்ட ஏதாவது பிரிவில் 06 மாத கால பயிற்சி பெற்றிருத்தல்.

**கவனத்திற்கு.**- விண்ணப்பப்படிவத்துடன் வேறு ஆவணங்கள் அல்லது பிரதிகள் இணைத்தல் ஆகாது.

**3. வயதெல்லை.**- 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு இவ் வயதெல்லை ஏற்புடையதல்ல)

**4. சம்பள அளவுத்திட்டம்- (MN 4 – 2006A) ரூபா 15215- 10x 215 – 4 x 240- 7 x 320 – 15 x 360 – ரூபா 25,965 (மாதாந்த)**

**5.தகுதிகாண் தடை.**- பதவியில் சேர்ந்து 03 வருட காலத்திற்குள் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**6.ஆட்சேர்ப்பு முறை.**- தகுதியான விண்ணப்பதாரிகள் நேர்முக பரீட்சை மூலம் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**7.சேவைக்கமர்த்தும் நிபந்தனைகள்.**- (i)இப்பதவி நிரந்தர மானதாகும், ஓய்வுதிய நிதிக்கு தகுதியுடையவராவார்.

(ii)அவர் தபுதாரர்கள், அநாதைகள் /விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தொடர்ந்தும் பங்களிப்புச் செய்தலும் வேண்டும்.

(iii)தாபன கோவையின் 2 ஆம் அத்தியாயத்திலுள்ள 10 – 12 ஆம் பிரிவுகள் ஏற்புடையதாகும்

**8. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய விதம்.**- இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவம் A4 தாளில் இரு பக்கமும் பாவித்து தயார் செய்துகொண்ட விண்ணப்பங்கள் 2008. 07. 15 ஆந் திகதி அல்லது அதற்கு முன் "தொல்லியல் பணிப்பாளர் நாயகம், தொல்லியல் திணைக்களம், சேர் மாக்கஸ் பர்னாந்து மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது மேல் பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் தமது நிறுவன தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். தாமதமாகி/தேவையான தகைமைகள் அற்ற /சரியாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். ஏற்படும் தாமதங்கள் பற்றி பொறுப்பேற்கப்பட மாட்டாது.

(கலாநிதி) சேனரத் திஸாநாயக,
பணிப்பாளர் நாயகம்,
தொல்லியல் திணைக்களம்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொல்லியல் திணைக்களம்**

.......................................... பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ----.
2. முதலெழுத்துக்களில் அறிமுகப் படுத்தும் பெயர்கள் : ----.
3. சொந்த முகவரி : ----.
4. சொந்த மாவட்டம் : ----.
5. பிரதேச செயலகம் :----.
6. (i) பிறந்த திகதி :
   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----
   (ii) 2008. 07. 15 க்கு வயது
   வருடம் ---- மாதம் ---- திகதி ----
7. தொலைபேசி இலக்கம் :----.
8. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ----.
9. ஆண்/பெண் ........................ 10. இனம் : ----.
11. திருமணமானவரா? / தனியாளா? ........................
12. கல்வித் தகைமைகள் : ----.
   (1) பட்டத்தின் பெயர் : ----.
   (2) பட்டம் பெற்ற வருடம் : ----.
   (3) சாதாரண பட்டம் /சிறப்பு பட்டம் : ----.
   (4) பாடங்கள் : ----.
   (5) பெற்றுள்ள சித்திகள் : ----.
   (6) மொழி : ----.
   (7) பல்கலைக்கழகம் : ----.

13.

| பயிற்சி பெற்ற நிறுவனம் | பயற்சியின் தரம் | பயிற்சி பெற்ற காலப்பகுதி | பெற்றுக் கொண்ட சான்றிதழ் |
|---|---|---|---|
| | | | |

14. அரச சேவையில் இருப்பவர் அல்லது அரச கூட்டுத்தாபன சேவையில் இருப்பவரானால்
   (1) திணைக்களம் /நிறுவனம் : ----.
   (2) தற்போதைய பதவி : ----.
   (3) சேவைக் காலம் : ----.
   (4) நிரந்தர ஓய்வூதிய திட்ட உரிமை உள்ளவர் என்பது பற்றி

இங்கு என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானவையும் என உறுதியுரைக்கின்றேன். இதிலடங்கிய ஏதேனும் விபரங்கள் பொய்யானவை அல்லது தவறானவை என கண்டு பிடிக்கப்பட்டால் தெரிவிற்கு முன் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமனத்தின் பின்னர் எதுவித இழப்பீடுமின்றி பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

.......................................,
விண்ணப்பதாரின் கையொப்பம்.

திகதி : ----.

**தற்போது அரச துறையில் உள்ளோர்களாயின்-**

**நிறுவன தலைவரின் சான்றுபடுத்தல்**

இவ்விண்ணப்பதாரரான திரு/ திருமதி/ செல்வி ................................ இந்த அமைச்சின் /திணைக்களத்தின்/நிறுவனத்தின் .......................... பதவியில் நிரந்தரமாக/தற்காலிகமாக சேவையிலுள்ளவர் எனவும் அவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை அமைச்சில்/ திணைக்களத்தல் /நிறுவனத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் /முடியாது எனவும் அறிவிக்கின்றேன்.

.......................................,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர் : ..........................
பதவி : ..........................
(உத்தியோக முத்திரை)
திகதி: ..........................

6-281

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

*நிலஅளவைத் திணைக்களம்*

### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்கு பயிலுனர் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சை

நிலஅளவைத் திணைக்களத்தில் இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் பின்வரும் பதவிகளுக்கு பயிலுனர் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்படும் பகிரங்கப் போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிகள் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1) பட வரைஞர் | - 100 |
| (2) கல்லச்சுக்கலை அச்சிடுவோர் | - 06 |
| (3) தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர் | - 01 |

2. **சேவையின் தன்மை :**

(i) *படவரைஞர்.-* படங்கள் தயாரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப வேலை, நிலஅளவை தொடர்பான ஆரம்ப மற்றும் இறுதி வேலை, அது தொடர்பான பதிவேடுகளைப் பராமரித்தல் போன்றன.

(ii) *கல்லச்சுக்கலை அச்சிடுவோர்.-* நிலஅளவைத் திணைக் களத்தினால் தயாரிக்கப்படுகின்ற படங்களை கல்லச்சுக்கலை முறைமைக்காகவும், ஏனைய தொழில்நுட்ப முறைமைகளினாலும் சிறந்த தரப்பரிசோதனைகளை மேற்கொண்டு அச்சிடுதல்.

(iii) *தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர்.-* வான் மற்றும் செய்மதிப் படங்களின் பொருள் விளக்கத்தினூடாக தரவுகளைப் பெறுதல், படம் தயாரித்தல் மற்றும் தரவுகளைக் கணனிமயப்படுத்தல்.

இப்பதவிகளுக்கான தெரிவு ஒரே பரீட்சையிலிருந்தே மேற்கொள்ளப்படும்.

3. **ஆட்சேர்ப்பு முறை.-** எழுத்துப் பரீட்சையில் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் தகமைபெறும் பரீட்சார்த்திகள் பொது நிர்வாகச் சுற்றுநிருபம் இல. 15/90 மற்றும் சம்பந்தப்பட்ட சுற்றுநிருபங்களின் நியதிகளுக்கமைய தெரிவுசெய்யப்படுவார்கள்.

4. **பரீட்சை முறை.-** இப்பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும் :-

(i) நுண்ணறிவு
(ii) தொழில்நுட்பவியல் வினாத்தாள்

5. பாடவிதானம் :

(i) *நுண்ணறிவு.-* (ஒரு மணித்தியாலம்) (100 புள்ளிகள்) - இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் பகுத்தறிவு பூர்வமாக சிந்திக்கும் ஆற்றல், ஆய்வுத்திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைப் பரீட்சிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டதாக இருக்கும்.

(ii) தொழில்நுட்பவியல் வினாத்தாள்.- (இரண்டு மணித்தியா லங்கள்) (100 புள்ளிகள்)

* *கணிதம்.-* அட்சர கணிதம் (சமனிலிகள், மாறிகள், தொடர்கள், மடக்கைகள்) திரிகோணமானம் (சமவலுச் சமன்பாடுகள், முக்கோணங்களைத் தெளிவாக்குதல்) புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியமவிலகல்) நிகழ்தகவு

* *பௌதிகவியல்.-* ஒளியும், ஒளியியலும் (தெறிவும் முறிவும் :- சமதள ஆடிகள், வளைந்த பரப்புகள், அரியம், கண்ணாடி வில்லைகள், ஒளியியல் சூத்திரம், நுணுக்குக் காட்டிகள், தொலைக் காட்டிகள்) நியூற்றனின் நிலையியக்கவியல் (எண்ணளவுகளும் காவிகளும், நியூற்றனின் இயக்கவிதிகள், இயங்கும் விசை)

* *நானாவித விடயங்கள் :-* புவிச்சரிதவியலின் அறிமுகம் (பூமியின் வடிவம், பிரதேசவியல் போன்றன) திண்மப் பதார்த்தங்களின் கோணப் பார்வை, எறியங்களின் பெறுமதி.

* *படவரைபியல்.*

6. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடத்தப்படும். இம்மொழிமூலங்களில் ஏதேனும் ஒரு மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான உரிமையைப் பரீட்சார்த்தி கொண்டுள்ளார். ஒரு பரீட்சார்த்தி பரீட்சையின் போது சகல வினாத்தாள்களுக்கும் ஒரு மொழியிலேயே விடை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் தாம் விண்ணப்பத்தில் பரீட்சை எழுதுவதற்கெனக் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

7. **தெரிவுசெய்யும் முறை.-** பரீட்சார்த்திகள் போட்டிப் பரீட்சையில் 40% ஆன அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை ஒவ்வொரு வினாத்தாளிலும் தகைமை பெறுவதற்காகப் பெறுதல் வேண்டும்.

* தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து, பரீட்சையில் சித்தியடைந்தவர்களில், இரண்டு வினாத்தாள்களிலும் ஆகக்கூடுதலாக ஒட்டுமொத்தப்புள்ளிகளைப் பெற்றவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களின் தகைமைகள் சரிபார்க்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டா.

* இரண்டு வினாத்தாள்களிலும் ஆகக்கூடுதலான ஒட்டுமொத்தப் புள்ளிகளைப் பெற்றவர்களில் ஒரேயளவு கூடுதலான புள்ளிகளைப் பெற்று தேவையான தகைமைகளையும் பூர்த்திசெய்யும் விண்ணப்ப தாரிகள் இருப்பார்களாயின் அவ்வாறான நிலைமைகளில் வினாத்தாள் II இல் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

* இரண்டு வினாத்தாள்களிலும் அதிகூடிய ஒட்டுமொத்தப் புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளின் வரிசைக்கிரமத்துக்கும் மற்றும் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள பதவிகளின் விருப்புக் கிரமத்துக்கும் அமைய பதவிகளுக்கு நியமனம் வழங்கப்படும். ஒவ்வொரு பதவியிலும் வெற்றிடங்களை நிரப்பும்போது மிகுதி விண்ணப்ப தாரிகளின் விருப்புரிமை இல. 2 மற்றும் இல. 3 கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

*8. **நியமன விதிகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். நியமனம் மூன்றாண்டு கால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். நியமனங்கள், இந்த வர்த்தமானப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.*

*9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பம், இந்த அறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப 21X29 செ.மீ. (ஏ4) அளவுத் தாளில் இரு பக்கங்களையும் பாவித்து விண்ணப்பதாரியினாலேயே தயாரிக்கப்பட வேண்டும் -*

*இலக்கம் 1-7 வரையான கூடுகள் : முதலாவது பக்கத்திலும்,*
*இலக்கம் 8-13.1 வரையான கூடுகள்: இரண்டாவது பக்கத்திலும்,*
*இலக்கம் 13.2-16 வரையான கூடுகள் : மூன்றாவது பக்கத்திலும்,*
*இலக்கம் 17-19 வரையான கூடுகள் : நான்காவது பக்கத்திலுமாக விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும்.*

*(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2008.07.13 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு "நில அளவையாளர் நாயகம், நிலஅளவைத் திணைக்களம், இல. 150, கிருல வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5" எனும் முகவரிக்கு அடையக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். (விண்ணப்பங்கள் தனிப்பட்ட பெயர்களுக்கோ அல்லது வேறு ஏதேனும் முகவரிக்கோ அனுப்பி வைத்தலாகாது.)*

*விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "இலங்கை தொழில்நுட்பச் சேவையின் பதவிகளுக்கு பயிலுனர் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சை" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.*

*(இ) அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். அதே சமயம் அரச கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பு அனுப்புதல் வேண்டும்.*

*(ஈ) விண்ணப்பதாரிகள் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும்.*

*(உ) சரியாகப் பூர்த்திசெய்யப்படாத, மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்படாத, வேண்டப்பட்ட தகைமைகளைக் கொண்டிராத மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதியின் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.*

*(ஊ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது என அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டது அல்லது தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற குற்றச்சாட்டுகள் எதுவும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக் கட்டணம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது.*

*10. **கல்வித் தகைமைகள்**.- (அ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் களத்துறையுடன் சம்பந்தப்பட்ட இரு பாடங்கள் உட்பட மூன்று (03) விஞ்ஞானப் பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறு ஏதேனும் ஒரு பாடம் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் சிறப்புச் சித்திகளுடன் மொத்தம் ஆறு (06) பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*அல்லது*

*(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட அடிப்படை கல்வித் தகைமைகளுடன், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றினால் வழங்கப்படும் களத்துறையுடன் தொடர்புடைய தொழில்நுட்பவியலிலான தேசிய சான்றிதழ் (மூன்று வருடகால பகுதிநேரப் பயிற்சி நெறி) அல்லது படவரைபில் ஒருவருட கால முழுநேரப் பயிற்சிப் பாடநெறியில் சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

***குறிப்பு**.- பகிரங்கப் போட்டிப் பரீட்சையில் தொழில்நுட்பச் சேவையின் பயிற்சித் தரத்திற்கு தகைமை பெற்றவர்களுக்கிடையில், அதாவது,*

(i) *மேலே பந்தி "அ" இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் உள்ள பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட சேவைக்கென நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி பெறவேண்டிய இரண்டு வருடகால கோட்பாடு ரீதியான மற்றும் செய்முறைப் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தியடைந்த பின்னர் வகுப்பு* II *"ஆ" சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பப் படிநிலையில் பதவிக்கு அமர்த்தப்படுவர்.*

(ii) *மேலே பந்தி "ஆ" இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் உள்ள பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட சேவைக்கென நிர்ணயிக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி பெறவேண்டிய ஒரு வருடகால கோட்பாடு ரீதியான மற்றும் செய்முறைப் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து சித்தியடைந்த பின்னர் வகுப்பு* II *"ஆ" சம்பள அளவுத்திட்டத்தின் அடிப்படையில் ஆரம்பப் படிநிலையில் பதவிக்கு அமர்த்தப்படுவர்.*

*11. **சம்பள அளவுத்திட்டம்** :.*

*பயிற்சித் தரம் : 1 ஆவது வருடம் - மாதாந்தம் ரூபா 12,920.*
*2ஆவது வருடம் - மாதாந்தம் ரூபா 13,040.*

*பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006* (II) *இன் 14 ஆம் பந்தியின் 9 ஆவது ஏற்பாடுகளுக்கு அமைவாக.*

*வகுப்பு III : மாதாந்தம் ரூபா 15,005 – 4 X 180 – 11 X 320 – 20 X 360 – 14 X 320 – ரூபா 27,885.* [MN–3–2006 A]
*வகுப்பு II : மாதாந்தம் ரூபா 15,005 – 4 X 180 – 11 X 320 – 20 X 360 – 14 X 320 – ரூபா 27,885.* [MN–3–2006 A] *(சம்பளப்படி 12 இலிருந்து ஆரம்பம்)*
*வகுப்பு I : மாதாந்தம் ரூபா 15,005 – 4 X 180 – 11 X 320 – 20 X 360 – 14 X 320 – ரூபா27,885.* [MN–3–2006 A] *(சம்பளப்படி 23 இலிருந்து ஆரம்பம்.*
*விசேட வகுப்பு : மாதாந்தம் ரூபா 20,030 – 11 X 365 – 18 X 500 – ரூபா 33,045.* [MN–7–2006 A]

*12. **வயதெல்லை**.- விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வருடங்களுக்குக் குறையாமலும் 45 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (இந்த ஆகக்கூடிய வயதெல்லை அரசாங்க*

சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதாகாது.)

*13.* **பரீட்சைக் கட்டணம்**.- (அ) பரீட்சைக் கட்டணம் ரூபா 300 ஆகும். ஒரு பரீட்சார்த்தி இத்தொகையை அவர் வசிக்கும் மாவட்ட நில அளவை அத்தியட்சகர் அலுவலகத்தில் அல்லது வேறு ஏதேனும் மாவட்ட நில அளவை அத்தியட்சகர் அலுவலகத்தில் செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிக்கப்பட்ட இடத்தில் ஒட்டுதல் வேண்டும். காசுக்கட்டளை மற்றும் காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பணம் செலுத்திய பற்றுச்சீட்டைக் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பின்வரும் மாவட்ட நிலஅளவை அத்தியட்சகர் அலுவலகங்களில் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்த முடியும். அவை வருமாறு :

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, அம்பாந் தோட்டை, மொனராகலை, பதுளை, அம்பாறை, கண்டி, மாத்தளை, நுவரெலியாள, இரத்தினபுரி, கேகாலை, அனுராதபுரம், பொலநறுவை, குருநாகல், புத்தளம், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, தியத்தலாவை (அளவையியல் படமாக்கல் நிறுவனம்)

*14.* பரீட்சை நடைபெறும் நகரங்களும் அவற்றின் இலக்கங்களும் பின்வருமாறு :

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்கள் | நகரங்கள்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கம்பஹா | 02 |
| களுத்துறை | 03 |
| கண்டி | 04 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 06 |
| காலி | 07 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 09 |
| குருநாகல் | 10 |
| புத்தளம் | 11 |
| அனுராதபுரம் | 12 |
| பொலநறுவை | 13 |
| பதுளை | 14 |
| மொனராகலை | 15 |
| இரத்தினபுரி | 16 |
| கேகாலை | 17 |
| அம்பாறை | 18 |
| மட்டக்களப்பு | 19 |
| திருகோணமலை | 20 |
| யாழ்ப்பாணம் | 21 |
| வவுனியா | 22 |

எனினும் ஒரு பரீட்சை நிலையத்திற்கு போதியளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இல்லாத சந்தர்ப்பங்களில், அந்தப் பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு, அப்பரீட்சை நிலையத்தின் பரீட்சார்த்திகள் அருகிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்பட வேண்டும். இப்பரீட்சை நிலஅளவையாளர் நாயகத்தினால் நடத்தப்படும். பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

*15.* **பரீட்சைக்கான அனுமதி**.- நிலஅளவையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களுக்கமைய, அனுமதி அட்டைகள் குறிப்பிட்ட பதவிக்காக வேண்டப்பட்ட அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் விண்ணப்பங்களில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அவருடைய அனுமதி அட்டையைப் பரீட்சை நிலையத்தில் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். அத்துடன் ஒரு பரீட்சார்த்தி அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு**.- ஒரு பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்குவதை அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என்றோ அல்லது இப்பதவிக்காக வேண்டப்பட்ட சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என்றோ கருதலாகாது.

*16.* **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் அவர்கள் தோற்றும் ஒவ்வொரு வினாபத்திரம் தொடர்பாகவும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை;
(ஆ) தபால் மா அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை;
(இ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பரீட்சைத் திகதிக்கு முன்னரான மூன்று (03) வருட காலத்திற்குள் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

*17.* **உறுதிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியின் ஆளடையாளம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, தரைப்படை அல்லது விமானப் படையின் கட்டளையிடும் அதிகாரி, பொலிசுச் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட ஒரு பதவியைக் கொண்டுள்ள ஒரு பொலிஸ் உத்தியோகத்தர், பொ. நி. சுற்றறிக்கை இல. 06/2006 இன் ஊழியர்களை தரங்களுக்கு உட்படுத்தல் நியதிகளுக்கமைய மூன்றாம் நிலை மட்ட மற்றும் சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

*18.* **பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் என ஒரு பரீட்சார்த்தி கண்டுபிடிக்கப்பட்டால், அவருடைய பரீட்சார்த்தி உரிமை பரீட்சைக்கு முன்போ, பரீட்சை நடைபெறும் போதோ, பரீட்சைக்குப் பின்போ அல்லது அதன் பின்பு எந்நேரத்திலும் இரத்துச் செய்யப்படலாம். சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்பு, ஒரு பரீட்சார்த்தி அவரது அறிவுக்கெட்டியவரையில் ஏதேனும் பிழையான தகவல்களை வழங்கியிருந்தார் அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தார் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

*19.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இப்பதவிக்காக வேண்டப்பட்ட தேவையான சகல தகைமைகளையும் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*20.* பரீட்சார்த்திகள் தேவைப்படும்போது பின்வரும் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு வேண்டப்படுவர் :

(i) பிறப்புச் சான்றிதழ்
(ii) கல்விச் சான்றிதழ்
(iii) அண்மையில் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்

(iv) இரண்டு நற்சான்றுப் பத்திரங்கள்
(v) தேர்தல் பதிவேட்டின் ஒரு பிரதி (கோரப்பட்டால் மட்டும்)

**குறிப்பு**.- ஆவணங்கள் அல்லது அதனுடைய பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படக்கூடாது.

21. சம்பந்தப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையிலும் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்.

22. இந்நிபந்தனையினால் கட்டுப்படுத்தப்படாத ஏதேனும் விடயங்கள் நிலஅளவையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

பி. ஜே. பி. மெண்டிஸ்,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 5,
2008.05.23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

நிலஅளவைத் திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்கு பயிலுனர் தரத்தில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பகிரங்கப் போட்டிப் பரீட்சை**

[ ]

(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்.)

(கொடுக்கப்பட்ட கூட்டில் குறியீடு/இலக்கத்தைக் குறிப்பிடுக)

பரீட்சை நடத்தப்படும் நகரம் பற்றிய அறிவுறுத்தல்களின் பந்தி 14 ஐப் பார்க்கவும்.

1.0 பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்பும் நகரின் பெயர் :

நகர இல. : [ ] நகரின் பெயர் : [ ]

(ஒவ்வொரு பதவிக்குமான ஒதுக்கீடு நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையிலும் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்)

2.0 முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி/செல்வி) :-
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.

2.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :-
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.

3.0 நிரந்தர முகவரி : (தெளிவான எழுத்துக்களில்) :-----.

3.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் :-----.
(அறிவுறுத்தல்கள் பந்தி இல. 14 ஐப் பார்க்கவும்)

மாவட்ட இல. : [ ] மாவட்டத்தின் பெயர் : [ ]

4.0 பால் :-
(ஆண் - ஆ, பெண் - பெ) [ ]

5.0 பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மொழிமூலம் :- [ ]

(சிங்களம் - சி, தமிழ் - த, ஆங்கிலம் - ஆ)

6.0 தேசிய இனம் :- [ ]

(சிங்களவர் - 1, இலங்கைத் தமிழர் - 2, முஸ்லிம் - 3, இந்தியத் தமிழர் - 4, பறங்கியர் - 5, மலாய் - 6, ஏனையவர்கள் - 7)

7.0 வர்த்தமானி விளம்பரத்தின் பந்தி இல. 10 இன் கீழ் உமக்குத் தகைமை உண்டா :-

ஆம் [ ] இல்லை [ ]

8.0 நீர் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் :-
(விருப்பபுத்தெரிவின் ஒழுங்குவரிசையில் 1, 2, 3 என்று குறிப்பிடப்பட வேண்டும். இது பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.)

1. படவரைஞர் : [ ]

2. கல்லச்சுக்கலை அச்சிடுவோர் : [ ]

3. தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர்கள் : [ ]

(ஒவ்வொரு பதவிக்குமான ஒதுக்கீடு நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையிலும், பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்படும்)

9.0 பிரதேச செயலகப் பிரிவு :-----.

9.1 கிராம அலுவலர் பிரிவு :-----.

9.2 இந்த மாவடடத்தில் எத்திகதியிலிருந்து நீர் வசிக்கிறீர் :----.

10.0குடியுரிமை :-

வம்சாவழியாக : [ ]

பதிவுமூலம் : [ ]

11.0தேசிய அடையாள அட்டை இல. :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

12.0 பிறந்த திகதி :-

ஆண்டு :-----. மாதம் :-----. திகதி :-----.

12.1 விண்ணப்ப முடிவுத்திகதியன்று வயது :-

வருடங்கள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

13.0 கல்வித் தகைமைகள் :-

13.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :-

முதலாவது அமர்வு :-----.

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :-----.
(ii) சுட்டிலக்கம் :-----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

13.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை விபரங்கள் :-

இரண்டாவது அமர்வு :-

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :-----.
(ii) சுட்டிலக்கம் :-----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

13.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை விபரங்கள் :-

(i) பரீட்சையின் ஆண்டும் மாதமும் :-----.
(ii) சுட்டிலக்கம் :-----.
(iii) சித்தியெய்திய பாடங்கள் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

14.0 ஏனைய தகைமைகள் :-----.

15.0 குற்றச் செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :-

ஆம் ☐ இல்லை ☐

15.1 ஆம் எனின் அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :-----.

16.0 கொடுப்பனவு செய்யப்பட்ட மாவட்ட நிலஅளவை அலுவலகம் :-

பற்றுச்சீட்டு இல. :-----.
கொடுப்பனவுத் திகதி :-----.
(இந்தப் பற்றுச்சீட்டு பக்கம் 4 இல் ஒட்டப்பட்டுள்ளது)

17.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :-

(அ) இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவரை உண்மையானவையும் சரியானவையும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) இதில் தரப்பட்டுள்ள எந்தத் தகவலும் பிழையானது அல்லது தவறானது எனத் தெரிவுசெய்யப்படுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் தகைமையற்றவனாகச் செய்யப்படலாம் என்பதனையும் நியமனம் பெற்றபின் கண்டுபிடிக்கப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் நான் நன்கு அறிவேன்.

(இ) இந்தப் பரீட்சையின் விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய நடந்துகொள்ள நான் இணங்குகின்றேன்.

(ஈ) பரீட்சைக் கட்டணமாக வழங்குவதற்கு பெறப்பட்ட 300 ரூபா காசுப் பற்றுச்சீட்டு கீழே குறித்த இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

.........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

18.0 **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................................................................ எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவன்/ அவள் தமது கையொப்பத்தை எனது முன்னிலையில் .................................. அன்று இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.............................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

19.0 **திணைக்களத் தலைவரின் பரிந்துரை** :-

இந்த உத்தியோகத்தர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்/விடுவிக்கப்பட முடியாது.

.............................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

(காசுப் பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்.)

6-175

## சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவி

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் நிர்வாகத்தின் கீழுள்ள வைத்தியசாலையில் பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இங்கு உள்ள மாதிரிப் படிவங்களைப் போன்று இருக்க வேண்டும். என்பதுடன், 2008.07.18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாகச் ''செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, ''சுவசிரிபாய'' இல. 385, பத்தேகம விமலவங்ச மாவத்தை, கொழும்பு 10'' என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவி'' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

2. **வருடாந்த சம்பளத் திட்டம்.**- ரூ. 15,260 - 6 ×180 - 4×240- 11×320-20×360- ரூபா 28,020 (MT 5-06)2006(iv)

3. **வயது எல்லை.**- 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு வயது எல்லை ஏற்புடையனவாகமாட்டாது.

4. **கல்வித் தகைமை.**-அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் சம்பந்தமாக 02 வருட கால டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.

5. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**- (i) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியத்திற்கு உரித்துடையது, விதவைகள்/ அனாதைகள், விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) 2007.05.28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்று நிருபத்தின்படி அரச மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச மொழியில் சேவைக்கு சேர்ந்து 05 வருட காலத்தினுள் சித்தி பெறுதல் வேண்டும்.

6. **சேவைக்கு சேர்த்துக்கொள்ளும் முறைமை** : போட்டிப் பரீட்சை மூலம் கூடிய புள்ளிகள் பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இப்போட்டிப் பரீட்சை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன் இப்பரீட்சை பின்வரும் விடயங்களிலா னதாகும் :-

பொது அறிவு - 100 புள்ளிகள்
நுண்ணறிவு - 100 புள்ளிகள்

7. தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்தை குறித்த திணைக்களத் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம்.**- செயலாளர், சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு, ''சுவசிரிபாய'', இல. 385, பத்தேகம விமலவங்ச மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு எழுதப்பட்ட கொழும்பு பிரதான தபால் கந்தோரில் மாற்றக்கூடிய ரூபா 250 இற்கான மணிஓடர் பரீட்சைக் கட்டணமாக எல்லா பரீட்சார்த்திகளும் செலுத்துதல் வேண்டும். மணிஓடர் விண்ணப்பப்பத்திரத்துடன் அனுப்புதல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எதுவித காரணத்தினாலும் திருப்பிச் செலுத்தப்படமாட்டா.

9. விண்ணப்பப்பத்திரம் அல்லது அது சம்பந்தமான வேறு ஏதாவது கடிதங்கள் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரது பெயருக்கன்றி அமைச்சில் சேவையாற்றும் அலுவலர் ஒருவருக்கு தனிப்பட்ட முறையில் அனுப்பக்கூடாது.

10. விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தர மாட்டாது. இவ்வறிவித்தலின் பிரகாரம் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(வைத்திய கலாநிதி) எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு,
''சுவசிரிபாய'',
இல. 385, பத்தேகம விமலவங்ச மாவத்தை,
கொழும்பு 10,
2008.05.26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

### சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சு

பேச்சுக்கலை பயிற்றுவிப்பாளர் பதவி

1. 1.1 முதலெழுத்துக்களுடனான கடைசிப் பெயர் : -----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் - உதாரணம் : SILVA A.B.)

1.2 முழுப்பெயர் : -----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.3 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில் /தமிழில்)

2. 2.1 முகவரி (தனிப்பட்ட) : -----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.2 முகவரி முழுப்பெயர் (தனிப்பட்ட) : -----.
(சிங்களத்தில் /தமிழில்)

2.3 முகவரி (அலுவலக) : -----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

2.4 முகவரி (அலுவலக) : -----.
(சிங்களத்தில் /தமிழில்)

(அரச சேவை/மாகாண சேவை/கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமை புரியும் உத்தியோகத்தரானால் அவரது அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால் அதை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.)

03. (அ) பிறந்த திகதி :-

| வருடம்: | | | | | மாதம் : | | | திகதி : | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(ஆ) விண்ணப்பிக்கும் கடைசித் திகதியன்று வயது :-

| வருடங்கள்: | | | மாதங்கள்: | | | நாட்கள்: | | |
|---|---|---|---|---|---|---|---|---|

4. தேசிய அடையாள அட்டை இல. : -----.

5. பால் : -----.

6. கல்வித் தகைமைகள் :-----.

7. அனுபவம் :-
சேவையாற்றிய இடம் :-----.
சேவைக்காலம் : -----. இருந்து :-----. வரை

8. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான விபரம் :-

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-----.
(ii) பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதியும் :-----.
(iii) செலுத்திய தொகை :-----.

பற்றுச்சீட்டினை கழன்று போகாதவாறு இங்கு ஒட்டவும்.

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகின்றேன். இவற்றுள் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமனத்திற்கு பின்பு கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு எதுவுமின்றிப் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் கடப்பாடுடையவனாவேன் என நான் அறிவேன்.

..................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

**திணைக்களத் தலைவரது சான்றிதழ் :**

.....................
திணைக்களத் தலைவரது கையொப்பம்.

.....................
பதவிப் பெயர்.

திகதி : -----.

6-187

---

**அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2008**

அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை அச் சேவையின் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான தகவுப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகள் மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2008 செத்தெம்பர் மாதம் நடாத்தப்படுமென்றுஇத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2.0 அரசாங்க முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை அச் சேவையில் வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களும் நகர இலக்கங்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| காலி | 03 |
| மாத்தறை | 04 |
| யாழ்ப்பாணம் | 05 |
| மன்னார் | 06 |
| முல்லைத்தீவு | 07 |
| திருகோணமலை | 08 |
| மட்டக்களப்பு | 09 |
| குருநாகல் | 10 |
| அனுராதபுரம் | 11 |
| பதுளை | 12 |
| இரத்தினபுரி | 13 |
| கிளிநொச்சி | 14 |

மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் எண்ணிக்கை இல்லாவிட்டால் அந் நிலையம் இரத்துச் செய்யப்படலாம்.

3.0 (i) இப் பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படுகின்ற சடட்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்டங்களை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

4.0 இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பின்வரும் தமைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் பத்து (10) வருட முனைப்பான சேவைக் காலத்தையும் அத்திகதியில் ஐந்து (05) வருட திருப்திகரமாக சேவைக்காலத்தையும் பூர்த்தி செய்துள்ள அலுவலர் ஒருவராதல்.

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படுகின்ற வினைத்திறன் காண் தடைப்பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

குறிப்பு.- இப்பரீட்சை நடாத்தப்படுகின்ற திகதி, பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்தி ஒருவர் சேவையில் வகுப்பு I க்கு தரமுயர்த்துவதற்காக தகைமை அடைந்த திகதியாகக் கருதப்படும். மேற்படி தகைமைகள் இன்றி பரீட்சைக்குத் தோற்றி அதில் சித்தி அடைகின்ற அலுவலர்கள் வகுப்பு I இற்கு தரமுயர்வு பெற தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

5.0 **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சார்த்திகள் பின்வரும் பாடங்கள் உள்ளடங்கிய எழுத்தினாலான ஒரு தகவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் :

| பாடம் | புள்ளிகள் | கால வரையறை |
|---|---|---|
| (i) தாபன நடைமுறைகள் | 100 | 1 1/2 மணித்தியாலங்கள் |
| (ii) அரச நிதி முகாமை | 100 | 1 1/2 மணித்தியாலங்கள் |
| (iii) விடய ஆய்வு | 100 | 1 மணித்தியாலம் |
| (iv) பொது வினாத்தாள் | 100 | 1 மணித்தியாலம் |
| மொத்தம் : | 400 | |

***தாபன நடைமுறைகள்***.- தாபன விதிக்கோவையின் I ஆம் II ஆம் தொகுதிகளில் உள்ளடங்கியுள் விடயங்கள் தொடர்பில் பிரயோக அறிவு எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I – சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 8 வினாக்கள் (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 4 வினாக்களில் 3 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - (75 புள்ளிகள்)

***அரச நிதி முகாமை :***

(அ) நிதி ஒழுங்கு விதி பற்றிய பிரயோக அறிவு
(ஆ) கணக்காய்வு பற்றிய அடிப்படை அறிவு
(இ) அடிப்படை வங்கிகள் தொடர்பான அனுபவம்
(ஈ) களஞ்சியப்படுத்தல் பற்றிய அடிப்படை அறிவு

தொடர்பாக பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாவதுடன் இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I – சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 8 வினாக்கள் (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 4 வினாக்களில் 3 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - (75 புள்ளிகள்)

***விடய ஆய்வு***.- அலுவலக நிர்வாகம் பற்றிய ஒரு பிரச்சினை தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை ஆராயுமுகமாக வடிவமைக்கப்பட்ட பல் விருப்பு சுருக்க விடைகள் மற்றும் பகுதிக்கட்டமைப்பு முறையிலான கட்டுரை வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். கற்கைக்காக விடயங்கள் வழங்கப்படுவதுடன் விடையளிக்க வேண்டிய வினாக்கள் பின்குறிப்பிட்டுள்ளவாறாகும்.

பகுதி I – பல்தேர்வு வினாக்கள் - 5 வினாக்கள் (5 புள்ளிகள்)

பகுதி II - சுருக்க விடை எதிர்பார்க்கப்படும் - 5 வினாக்கள் (5 புள்ளிகள்)

பகுதி III - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 5 வினாக்கள் (90 புள்ளிகள்)

பொதுவினாத்தாள்.- உள்நாட்டு, வெளிநாட்டு நடப்பு விவகாரங்களில் விண்ணப்பக்காரரது பொது அறிவைப் பரீட்சிப்பது இதன் நோக்கமாகும். இவ் வினாத்தாள் 3 பகுதிகளைக் கொண்டிருக்கும்

பகுதி I – பல்தேர்வு வினாக்கள் - 32 வினாக்கள் (16 புள்ளிகள்)

பகுதி II - வழங்கப்படும் 4 தலைப்புக்களில் 2 இற்கு சிறுகுறிப்பு எழுதுதல் வேண்டும் (36 புள்ளிகள்)

பகுதி III - வழங்கப்படும் கட்டுரை முறையிலான 4 வினாக்களில் 2 இற்கு விடையளித்தல் வேண்டும். (48 புள்ளிகள்)

***குறிப்பு***.- (i) பரீட்சார்த்திகள் சேவையில் சேர்ந்த மொழியிலோ அல்லது வேறு அரச கரும மொழியொன்றிலோஇவ் வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றுக்கு நாற்பது சதவீத (40%) புள்ளிகளும் 160 அல்லது அதற்குக் கூடிய மொத்தப் புள்ளிகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6.0 பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7.0 விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இம் மாதிரிப்படிவ உருவில் தமது விண்ணப்பபடிவங்களைத் தயாரித்துதமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2008 யூலை மாதம் 14 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக “பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல” என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்போது திருப்திகரமான சேவை தொடர்பான சான்றிதழ் ஒன்றையும் அதில் உள்ளடக்க வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பமும் எல்லா வகையிலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதிலும் தன்னால் சேவைச் சான்றிதழ் கையொப்பமிடப்பட்டள்ளது என்பதிலும் திணைக்களத் தலைவர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும். பரீட்சை ஆணையாளரிடம் விண்ணப்பங்கள் அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.0 பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமதுஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்டுள்ள ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

9.0 **விண்ணப்பப்பத்திரங்கள்**.- இலக்கம் 1.1 இலிருந்து 1.9 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் “ஏ4” அளவிலான ஒரு தாளில் விண்ணப்பத்தைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். விண்ணப்பத்தை

தட்டச்சின் மூலம் தயாரித்துக்கொள்ளலாம். எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும். மாதிரி விண்ணப்பத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

முதல் தடவையாக இப் பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின் போது அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை விண்ணபத்தில் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை உரியவாறு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக்கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

உரியவாறு விண்ணபங்களைப் பூர்த்தி செய்து உரிய திகதிக்கு முன்னர் அவ்விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எவரேனும் அலுவலர் ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடையாவிடின், அனுமதி அட்டை கிடையாமை பற்றி பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" என்னும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும். (தந்தி முகவரி "பரீட்சை" பத்தரமுல்ல)

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணபதாரியின் முழுப்பெயர் ;
(iii) முழு முகவரி ;
(iv) விண்ணப்பம் தபாலில் சேர்க்கப்பட்ட அஞ்சல் அலுவலகம், பதிவு இலக்கம் மற்றும் அனுப்பிய திகதி.

10.0 பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறான திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் செலுத்தப்படமாட்டாது.

11.0 அரச கரும மொழிக்கொள்கை நோக்கத்தின்பொருட்டு எல்லா விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவற்றை அம் மொழியிலேயே பூரணப்படுத்தல் வேண்டும்.

12.0 இப் பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எவ் விடயம் தொடர்பாகவும்இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

ஏ. நோபட்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2008, மே 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலர்களை அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு I இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2008**

Examination for Promotion of Officers in Class II of Public Management Assistants' Service to Class I - 2008

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2/தமிழ் - 3/ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 இன் பிரகாரம் நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரத்தையும் நகர இலக்கத்தையும் குறிப்பிடவும்)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் (ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்) :-----.
உதாரணம் : SUNIL, A.B.

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில (சிங்களத்தில்/ தமிழில்):-----.

1.3 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-----.

1.4 முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் (சிங்களத்தில்/ தமிழில்) :-----.

1.5 நீங்கள் அரசாங்க சேவையில் சேர்ந்த பின்னர் உங்களின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா ? :-----.
ஆமெனில் முற்பட்ட பெயரைக் குறிப்பிடவும் :-----.

1.6 சேவை நிலையமும் முகவரியும் :-----.

1.6.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (ஆங்கிலக் கெபிற்றல் எழுத்தில்) :-----.

1.6.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.7 பால் :- (பெண் - 1, ஆண் - 0)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடவும்)

1.8 பிறந்த திகதி :-

ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |

1.9 தேசிய அடையாள அட்டை இல. :-

*2.0* தற்போது வகிக்கும் பதவி :-

*2.1* பதவி :-----.

*2.2* நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :-----.

*2.3* குறித்த சேவையின் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலராக நியமனம் பெற்ற திகதி :-----.

| ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|

*2.4* நீங்கள் சேவைக்காலத்திற்குள்ளான எல்லா சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளீர்களா ? :-----.
இல்லாவிட்டால் விபரங்களைக் குறிப்பிடவும் :-----.

*2.5* நீங்கள் எத்தகையதுமான ஒரு தண்டனை/தண்டனைகளைப் பெற்றிருப்பின் அது பற்றி சுருக்கமாகக் குறிப்பிடவும் :-----.

*2.6* நீங்கள் தற்போது ஒரு கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட சபையின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தால் அது பற்றிய விபரங்கள் :-----.

*2.7* நீங்கள் வெளிநாட்டுத் தொழில் ஒன்றுக்காக அல்லது வேறு ஏதேனும் அலுவலுக்காக சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :-----.

*3.0* *3.1* நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா? :-----.

*3.2* பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றாவிட்டால் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :-----.

*3.3* முத்திரைக் கூடு :-----.

> நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்கு தோற்றாவிட்டால் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை இங்கு ஒட்டிவிடவும்.

*4.0* **விண்ணப்பதாரியின் கூற்று** :

(i) மேற்படி என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் உண்மையானவை எனவும்,

(ii) அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் உள்ள அலுவலர் எனவும் ......................... ஆந் திகதி அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இற்கு நியமனம் பெற்றேன் என்றும்,

(iii) 2008 யூலை 14 ஆந் திகதி அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் 10 வருடங்கள் முனைப்பான சேவைக்காலம் மற்றும் 5 வருட திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளேன் என்றும்,

(iv) நான் முதன் முறையாக பரீட்சைக்கு தோற்றுகிறேன் எனவும்/ பரீட்சைக் கட்டணத்திற்கான உரிய பெறுமதியுடைய முத்திரைகள் இங்கு ஒட்டப்பட்டுள்ளன என்றும்

பயபக்தியுடன் உறுதிப்படுத்துகிறேன்.

இங்கு தரப்பட்டுள்ள ஏதேனும் தகவல் பொய்யானது அல்லது பிழையானது எனத் தெரியவருமாயின் எனக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைந்தொழுக உடன்படுகிறேன்.

.............................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.
(அடிக்குறிப்பைப் பார்க்கவும்)

திகதி :-----.

**குறிப்பு**.- (1) அரச முகாமை உதவியாளர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட முன் வகித்த பொது எழுதுநர் சேவை அல்லது அதனோடிணைந்த சேவையின் வகுப்பு II/II "அ" வின் சேவைக் காலத்தை அரச முகாமை உதவியாளர் வகுப்பு II இன் சேவைக் காலத்தை கணிப்பீடு செய்யும்போது உரியதாகக் கொள்ள வேண்டும்.

2. திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

எனது அலுவலகத்தின் அலுவலர் திரு./ திருமதி/ செல்வி ............................................................................................................ என்பவரை எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் .............................. ஆந் திகதி எனது முன்னிலையில் இதில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

......................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை** :

(i) திரு./ திருமதி/ செல்வி ................................................ ................................................ 2008, யூலை மாதம் 14 ஆந் திகதியில் அரச முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு II இல் 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர் என்றும், ................................ ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை உடையவர் என்றும்,

(ii) அவரது சுயவிபரக் கோவையின்படி II ஆம் வகுப்பின் நியமனக் கடிதத்தின் இலக்கம் .................................................. (நியமனக் கடிதத்தின் இலக்கத்தைக் குறிப்பிடவும்) என்றும்,

(iii) அவர் விண்ணப்பப்படிவத்தின் 1.0 முதல் 4.0 வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் செவ்வை பார்க்கப்பட்டது என்றும் அவை சரியானவை என்றும்,

(iv) அவர் முதற் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றார் என்றும்/ *பரீட்சைக்குரிய முத்திரைகள் இங்கு ஒட்டப் பட்டுள்ளன என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

* (தேவையற்ற சொற்களைக் கீறிவிடவும்)

6-230

## தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சு

தொழில்நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களம்

### பகுதிநேர விரிவுரையாளர்கள்/போதனாசிரியர்களைத் தெரிவுசெய்தல் - 2008/2009

கீழ்வரும் அறிவுறுத்தல்களுக்கிணங்க இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் விரிவுரைகள்-போதனைகள் நடத்துவதற்குத் தகுதியும் அனுபவமும் கொண்டவர்ளிடமிருந்து இவ் அறிவித்தலின் இறுதியின் காணப்படும் தொழில்நுட்பக்கல்லூரிகளின் அதிபர்களினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்குத் தேவையான விண்ணப்பங்கள், பாடவிபரங்கள் என்பவற்றை அவரவர் கடமையாற்ற விரும்பும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம். இதனைப் பெற்றுக்கொள்வதற்கு முகவரியுடன் முத்திரை ஒட்டப்பட்ட 9"x4" அளவு நீளம் கொண்ட கடித உறையினை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பகுதிநேர விரிவுரையாளர்/போதனாசிரியர்" எனக் குறிப்பிடவும். குறிப்பிட்ட தொழில்நுட்பக்கல்லூரிகளில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

3. பாடவிபரங்கள், விண்ணப்பப்படிவங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2008.07.11 ஆகும்.

4. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (i) விண்ணப்பதாரிகள் தமது கல்வித்தகமை, தொழிற்தகமை, அனுபவம் என்பவற்றை முழுமையாகவும் சரியாகவும் குறிப்பிட வேண்டும்.

(ii) கொடுப்பனவுகள்.- விண்ணப்பதாரிகளின் கல்வித்தகைமை, தொழிற்தகைமை, அனுபவம் என்பவற்றிற்கமைய ஒரு மணித்தியாலத்திற்கு 125 முதல் 250 ரூபா வரை வழங்கப்படும்.

(**குறிப்பு**.- எதிர்காலத்தில் இந்த தொகையில் மாற்றம் ஏற்படும்)

(iii)விண்ணப்பங்கள் அனுப்பும் முறை.- அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் பகுதி நேர விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் தங்கள் வழமையான கடமைக்கு பாதிப்பு ஏற்படாது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iv)தெரிவு.- குறித்த தொழில்நுட்பக்கல்லூரி அதிபரினால் நேர்முகப்பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டு விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். கற்பித்தல் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கல்லூரியின் தேவைகளுக்கமைய இந்நியமனம் இரத்துச் செய்யப்படலாம்.

(v) மேலதிக கொடுப்பனவுகள் எதுவுமின்றி தமது பாடத்திற்கான உள்ளார்ந்த பரீட்சைகளை இப்பகுதி நேர விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் நடாத்துதல் வேண்டும்.

5. இப்பதவி 2008/2009 ஆம் வருட கல்வி ஆண்டிற்கு மட்டுமே உரியதாகும். தேவையேற்படின் இதற்கு முன்னதாகவேனும் முடிவுக்கு கொண்டுவரலாம்.

6. ஒரு பாடத்திற்கு மேல் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் தொழில்நுட்பக்கல்லூரியின் அதிபருக்கு அனுப்புதல் வேண்டும்.

டாக்டர் எச். எல். ஒபயசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்.

தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்,
த. பெ. இல. 557,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

**தொழில் நுட்பக் கல்லூரிகளின் பெயர்ப்பட்டியல்**

| தொடர் இல. | தொழில்நுட்பக் கல்லூரி யின் பெயர் | முகவரி | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி | ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 10. | கொழும்பு |
| 2. | காலி தொழில் நுட்பக் கல்லூரி | களுவெல, காலி | காலி |
| 3. | கண்டி தொழில் நுட்பக் கல்லூரி | அறுப்பொல, கண்டி | கண்டி |
| 4. | யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி | பிறவுண் வீதி, யாழ்ப்பாணம், | யாழ்ப்பாணம் |
| 5. | பதுளை தொழில் நுட்பக் கல்லூரி | கிறீன்லண்ட்டிரைவ், பதுளை, | பதுளை |
| 6. | கேகாலை தொழில் நுட்பக் கல்லூரி | கச்சேரி வீதி, கேகாலை, | கேகாலை |
| 7. | அநுராதபுரம் தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், அநுராதபுரம், | அநுராதபுரம் |
| 8. | குருநாகல் தொழில் நுட்பக் கல்லூரி | புத்தளம் வீதி, குருநாகல், | குருநாகல் |
| 9. | இரத்மலானை தொழில் நுட்பக் கல்லூரி | காலி வீதி இரத்மலானை, | கொழும்பு |
| 10. | அம்பாறை ஹாடி தொழில் நுட்பக் கல்லூரி | இங்கினியாகல வீதி, அம்பாறை, | அம்பாறை |
| 11. | மாத்தறை தொழில் நுட்பக் கல்லூரி | மெத்தவத்தை, மாத்தறை, | மாத்தறை |
| 12. | சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரி | அம்பாறை வீதி, சம்மாந்துறை, | அம்பாறை |
| 13. | களுத்துறை தொழில் நுட்பக் கல்லூரி | களமுல்ல, களுத்துறை, | களுத்துறை |
| 14. | இரத்தினபுரி தொழில் நுட்பக் கல்லூரி | பார்ம் தோட்டம், கொழும்பு வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |
| 15. | வறக்காப்பொல தொழில் நுட்பக் கல்லூரி | அம்பகல வீதி, வறக்காப்பொல, | கேகாலை |
| 16. | குளியாப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | பன்னலவீதி, குளியாப்பிட்டிய, | குருநாகல் |
| 17. | பாத்ததும்பறை தொழில் நுட்பக் கல்லூரி | நவயாலதென்ன, கடுகஸ்தொட்ட, | கண்டி |
| 18. | நுவரெலியா தொழில் நுட்பக் கல்லூரி | ஜயதிலக்க மாவத்தை, நுவரெலியா, | நுவரெலியா |
| 19. | ஹோமாகம தொழில் நுட்பக் கல்லூரி | கொடகம, ஹோமாகம, | கொழும்பு |
| 20. | பெலியத்த தொழில் நுட்பக் கல்லூரி | புவக்தண்டாவ, பெலியத்த, | ஹம்பாந்தோட்டை |
| 21. | ஹசலக தொழில் நுட்பக் கல்லூரி | யோத எல வீதி, ஹசலக | கண்டி |
| 22. | தம்புள்ள தொழில் நுட்பக் கல்லூரி | மாத்தளை வீதி, தம்புள்ள | மாத்தளை |
| 23. | பலப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | வந்ததுவ புகையிரத நிலைய வீதி, பலப்பிட்டிய, | காலி |
| 24. | வாரியப்பொல தொழில் நுட்பக் கல்லூரி | சிலாபம் வீதி, வாரியப்பொல, | குருநாகல் |
| 25. | மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரி | மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு, | மட்டக்களப்பு |
| 26. | பண்டாரவளை தொழில் நுட்பக் கல்லூரி | வேவதென்ன, பண்டாரவளை, | பதுளை |
| 27. | மொனராகலை தொழில் நுட்பக் கல்லூரி | சிறிகல, மொனராகலை | மொனராகலை |
| 28. | கம்பஹா தொழில் நுட்பக் கல்லூரி | வெரலவத்தை, யக்கல | கம்பஹா |
| 29. | திருகோணமலை தொழில் நுட்பக் கல்லூரி | மிஹிந்தபுரம், திருகோணமலை, | திருகோணமலை |
| 30. | தெஹியத்தகண்டிய தொழில் நுட்பக் கல்லூரி | மஹாவானவெல, தெஹியத்தகண்டிய, | அம்பாறை |
| 31. | மாத்தளை தொழில் நுட்பக் கல்லூரி | எம். சீ. வீதி, மாத்தளை, | மாத்தளை |
| 32. | வீரவில தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், வீரவில, | ஹம்பாந்தோட்டை |
| 33. | மெதகம தொழில் நுட்பக் கல்லூரி | மெதகம, | மொனராகலை |
| 34. | பொலன்னறுவை தொழில் நுட்பக் கல்லூரி | வித்தியாபுர, பொலன்னறுவை, | பொலன்னறுவை |
| 35. | எம்பிலிப்பிட்டிய தொழில் நுட்பக் கல்லூரி | புதிய நகரம், எம்பிலிப்பிட்டிய, | இரத்தினபுரி |
| 36. | வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி | மன்னார் வீதி, வவுனியா, | வவுனியா |
| 37. | அக்கறைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரி | அக்கறைப்பற்று, | அம்பாறை |
| 38. | ஆணமடுவ தொழில் நுட்பக் கல்லூரி | கம்உதாபூமி, தம்மண்ணகம, ஆணமடுவ | புத்தளம் |

6-278

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.